புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

==========================================================================================

# புறநானூறு காட்டும் பொருளியல் சிந்தனைகள்

==========================================================================================

**கட்டுரையாளர்**
**முனைவர்க.அகல்யா**
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
காவேரி மகளிர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

==========================================================================================

**ஆய்வு சுருக்கம்**

பண்டைத் தமிழ் மக்கள் தம் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள பல்வேறு தொழில்களைக் கற்றுக் கொண்டதோடு, தமக்குத் தேவையானவற்றைப் பண்டமாற்றின் மூலமும் வணிகத்தின் மூலமும் நிறைவு செய்யத் தொடங்கினர். பெருந்தொழில்கள் அனைத்தும் ஐந்திணைகளை சார்ந்தே அமைந்துள்ளன. சங்க கால மக்கள் ஐவகை நிலத்தில் பின்பற்றிய தொழில்கள் குறித்தும், அதன் வாயிலாக பொருளாதார முன்னேற்றம் அடைந்ததும், பொருளாதார முன்னேற்றத்தால் ஏற்பட்ட பொருளியல் சிந்தனைகள் குறித்தும் புறநானூற்றின் வழி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**கருச்சொற்கள் : சங்க இலக்கியம், புறநானூறு, பொருளாதாரம், தமிழர் பொருளாதாரம்**

## முன்னுரை

மனித சமுதாயத்தின் வாழ்வியல் பற்றி எண்ணிய சிந்தனையாளர்கள் வாழ்க்கையின் ஒரு கூறாகப் பொருளியலையும் எண்ணிப் பார்த்தனர். பிளேட்டோவின் குடியரசு, அரிஸ்டாட்டிலின் படைப்புகள், திருவள்ளுவரின் திருக்குறள், கவுடில்யரின் அர்த்த சாஸ்திரம் போன்ற தொன்மையான நூல்களில் எல்லாம் சமுதாயக் கருத்துக்களோடு சேர்ந்து பொருளியல் கருத்துக்களும் காணப்படுகின்றன. 1976 இல் பொருளியலின் தந்தையாகக் கருதப் பெறுகின்ற "ஆடம் ஸ்மித்" எழுதிய "நாடுகளின் செல்வம்" என்னும் நூல் வெளிவந்தது. ஆடம் ஸ்மித் பொருளியல் சிந்தனைக்கு அறிவியல் அடிப்படையில் ஓர் உருவம் அமைத்து அளித்தார். இதனையே பொருளியல் சிந்தனை வரலாற்றின் தொடக்கமாகக் கருதலாம்.

*தமிழரது பொருளியல் சிந்தனைகளை சங்க காலத்தில் இருந்தே காண முடிகின்றது. சங்க காலச் சான்றோர்களின் பொருளியல் சிந்தனை தனித்தன்மை வாய்ந்தது. உலகியல் தழுவியது. பயன்பாட்டு நோக்கில் அமைந்தது. அவர்கள் பொருளின் இன்றியமையாமையினை நன்கு உணர்ந்ததோடு நிலையாமைத் தன்மையினையும் நன்கு அறிந்திருந்தார்கள். அதனை எதிர்கால சமுதாயத்திற்கு எடுத்துரைக்கும் வண்ணம் பாடல்களாக பதிவும் செய்துள்ளனர்.*

*அறவழியில் ஈட்டிய பொருளைக் கொண்டு இன்பம் நுகர்வதே சங்கச் சான்றோர் வலியுறுத்திய பொருளியல் நெறியாக இருந்தது*

*"வழிபடு தெய்வம் நிர்புறம் காப்பப் பலிதீர் செல்வமொடு*

*வழிவழி சிறந்து பொலிமின்" (தொல்.பொருள்.1367)*

*என்னும் தொல்காப்பிய நூற்பா நினைக்கத்தக்கது*

**பொருளாதாரம் சொல் விளக்கம் :**

***"பொருளாதாரம், பொருளியல், பொருள் நூல், அர்த்த சாஸ்திரம் என்று கூறுவதையெல்லாம் ஆங்கிலத்தில் Economics என்ற ஆங்கிலச் சொல் Eco என்ற கிரேக்க அடிச் சொல்லில் இருந்து பிறந்தது. இந்த கிரேக்க வேர்ச்சொல்லுக்கு குடும்ப நிர்வாகம் (Household Managements) என்று பொருள். அதியில் குடும்பத்தை நிர்வாகம் செய்வதையே பொருளியல் என்ற சொல் குறித்து வந்தது எனக் கொள்ளலாம்"*** *3 என்கிறார் பா முருகன்*

**பொருளாதாரம் குறித்த அறிஞர்கள் கருத்து** *:*

*"பொருள் மனிதனின் அடிப்படைத் தேவையாகும். இது பல்வேறு வடிவங்களில் காணப்படுகிறது. ஒரு பக்கம் செல்வத்தைப் பற்றியும் மறுபக்கம் மிக முக்கியமான மனிதனைப் பற்றியும் பொருளியல் கூறுகிறது"1ஆல்பிரட் மார்ஷல்*

*"உழைப்பே பொருளின் மதிப்பினைத் தருவது. உழைப்பாளிகளின் தரத்தை உயர்த்தி சமதர்மம் காண்பதே பொருளாதாரம்" - சிஸ்மாண்டி "சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வினை போக்கி இனப்போரினை விமர்சிப்பதே பொருளியல்" 2- காரல் மார்க்ஸ். அன்றாட வாழ்வுடன் இணைந்து செயல்படும் பொருட்டு செல்வத்தின் செயல்பாடுகளைப் பற்றிய நெறிமுறைகளை வகுத்துக் கூறுவதே பொருளாதாரக் கொள்கை ஆகும்.*

***தமிழர்களின் நிலப் பாகுபாடும் பொருளாதாரச் சிந்தனைகளும்:***

*தமிழ்ச் சூழலில் நிலம் என்பது ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டு இருந்தது . நிலத்தை முதல் காரணமாகக் கொண்ட யாதொன்றையும் வகைப்படுத்தும் இலக்கண மரபை தொல்காப்பியம் வரையறுக்கிறது. குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஒவ்வொரு நிலமும் அதற்கான முதல் உரி கருப்பொருள்களைக் கொண்டு அடையாளப்படுத்தப்படுகிறது. சங்க காலத்தில் ஐவகை நில மக்களும் தங்களின் தொழில்கள் மூலமாக பொருளாதாரத் தேவையை நிறைவு செய்தனர். அவ்வாறான ஐவகை நில மக்களின் தொழில்கள் குறித்தும், அதன் வாயிலாக அடைந்த பொருளாதார மேம்பாடு குறித்தும் இவ்வாய்வு எடுத்துரைப்பதாக அமைகிறது. சங்க கால மக்களின் வாழ்வியல் முறையை விளக்குவதால் விளக்கமுறை ஆய்வாகவும், ஐந்திணை மக்களின் பொருளாதாரச் சிந்தனைகளை தொகுப்பதால் தொகுப்பு முறை ஆய்வாகவும் இவ்வாய்வு அமைகின்றது.*

***குறிஞ்சி நிலம் - வேட்டையாடுதல்*** *:*

*மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. குறிஞ்சி நிலத்து மண் சிறு சிறு குன்றுகளும் மண்ணும் கலந்த பகுதியாக இருக்கும். ஆதி மனிதன் முதல் முதலில் வேட்டையாடுதலையே மேற்கொண்டான் என்று மானுடவியலார் கூறுகிறார். பிற தொழில்கள் உருவாவதற்கு முன் வேட்டைத் தொழிலையே செய்தனர். வேட்டையாடுதல் என்ற தொழிலை இலக்கியங்கள் பரவலாகக் காட்டுகின்றன. இது குறிஞ்சி நில மக்களின் முக்கியத் தொழிலாக இருக்கின்றது. கூடவே தினை விதைத்தல், விலங்குகள் வளர்த்தல் ஆகியனவற்றையும் இவர்கள் செய்துள்ளனர். இந்நிலத்தில் பயிர் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட நிலப்பகுதி வெவ்வேறு பெயர்களில் வழங்கப்பட்டதை சங்கப் பாடல்களில் இருந்து அறிய முடிகிறது. மரங்களை அழித்து விளைநிலமாக்கிய புனத்தை “இதை“ (அகம்.394) என்றும், பழமையான விளை நிலத்தை ”முதைபுனம்” (குறுந்.105:1) என்றும் குறித்தனர். கிராமங்களில் ”தினைப்புனம்” என்ற சொல்லாடல் இன்றும் வழங்கி வருவது கவனிக்கத்தக்கது. குறிஞ்சி நில மக்கள் கூட்டாகச் சேர்ந்து வேட்டையாடும் வழக்கத்தை மேற்கொண்டனர். குறிஞ்சி நில மக்களின் உணவாக வேட்டையாடிய விலங்குகள் இருந்தன. இதனை,*

***”அதளெறிந் தன்ன நெடுவண் களரின்***

***ஒருவ னாட்டும் புல்வாய் போல***

***ஓடி யுய்தலும் கூடும் மன்” (புறம்.193: 1-3)***

*என்ற புறப்பாடல் தெளிவுபடுத்துகின்றது. குழுவாக மட்டுமின்றி தனியாகவும் வேட்டையாடி உள்ளதை,*

*” யானை வேட்டுவன் யானையும் பெறுமே”* ***(புறம்.214: 4)***

*” கைமான் வேட்டுவன்”* ***(புறம்.320: 3)***

*என்ற பாடலடிகள் அறிவுறுத்துகின்றன.*

*வேட்டையாடிய விலங்குகளின் ஊண் உணவாகப் பயன்பட்டதோடு பண்டமாற்று வணிகத்திலும் பயன்பட்டு உள்ளது. குறிப்பாக, யானைத் தந்தம் பண்டமாற்றில் சிறப்பிடம் பெற்றது. வேடர்கள் விலங்குகளை வேட்டையாடி அவற்றின் ஊனினைப் பெட்டிகளில் இட்டு நெல்லிற்கு மாற்றாகக் கொடுத்துள்ளனர்.*

*”ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்*

*குளக்கீழ் விளைந்த களக் கொள் வெண்ணெல்*

*முகந்தனர் கொடுப்ப”* ***(புறம்.33: 4-6)***

*என்பது பாடலடி ஆகும்.*

***முல்லை நிலம் - கால்நடை வளர்ப்பு*** *:*

*காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனப்பட்டது. இங்கு பயிரின்றி தரிசாய் கிடந்த இடத்தை கொல்லை(அகம்.89:17) என்றும், மரங்கள் நிறைந்த முல்லைப் பகுதியை புறவு(சிறுபாண்.169), கானம்(குறுந்.21:4) என்ற சொற்களாலும் குறிப்பிட்டனர். முல்லை நில*

மக்களின் முக்கியத் தொழிலாக கால்நடை வளர்ப்பு இருந்துள்ளது. பண்டைத் தமிழர் கால்நடையின் பயனை நன்கு அறிந்திருந்தனர். ஆநிரை மேய்ப்பவர் ''ஆயர்'', ''கோவலர்'', ''இடையர்'' என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். சங்கச் சமூகத்தின் பொருளாதார வளமையை தீர்மானிக்கும் காரணிகளுள் முதன்மையானதாக கால்நடைகள் இருந்துள்ளது. புறநானூற்று வெட்சித் திணையில் வெட்சிப் பூ சூடி பகைநாட்டுப் பசுக்களை கவர்ந்து வருதல் குறித்துக் கூறப்படுகிறது. கால்நடை வளர்ப்பில் ஆண்களின் பங்கு இருந்தாலும் பால் கறத்தல் முதல் பால்படு பொருட்களை பண்டமாற்றுதல் வரை உள்ள அதிகப்படியான செயல்பாடுகள் பெண்களிடம் இருந்தன. கால்நடைகளை மூலதனமாகக் கொண்டு குடும்பத்தையும் சமூகத்தையும் மேம்படுத்தி உள்ளனர். ஆநிரைகள் பெருஞ்செல்வ குறியீடுகளாய் விளங்கின. பண்டைத் தமிழில் மாடு என்னும் சொல்லே ''செல்வம்'' என்பதைக் குறித்து இருக்கின்றது. நாட்டில் செல்வ வளம் பெருக வேண்டும் என்பதை,

*'' புலரி விடியல் பகடு பல வாழ்த்தி'' (புறம்.385:2)*

என்று புறநானூறு பதிவு செய்கிறது.ஆயர்கள் முல்லை நிலத்து புல்வெளிகளில் ஆநிரைகளை மேய விட்டதை,

*''முல்லை வியன்புலம் பரப்பி கோவலர்*

*குறும்பொறை மருக்கின் நறும்பூ அயர'' (அகம். 14 :7-8)*

என்ற அடிகளாலும், பசுக்களை மேயவிட்டு, சிறு குன்றுகளில் மனமுடைய பூக்களை மாலையாய் கட்டி மகிழ்ந்ததையும், ஆநிரைகளை ஒழுங்குபடுத்த குழல் ஒலிகளையும் சீட்டையும் பயன்படுத்தியதையும்,

*''பாசிலைத் தொடுத்த வுவலைக் கண்ணி*

*மாசு ணுடுக்கை மடிவா யிடையன்*

*சிறுதலை யாயமொடு குறுகல் செல்லா'' (புறம் .54:10 -12)*

என்ற அடிகளாலும் காணமுடிகின்றது

ஆநிரைகளில் இருந்து கிடைக்கும் மாமிசம், பால், தயிர், வெண்ணை போன்றவை வாணிகப் பொருள்களாக மாற்றப்பட்டன. இவற்றை விற்பனை செய்வதில் ஆயர் மகளிர் ஈடுபட்டனர். இவர்கள் இரவில் பாலுக்கு சிறிய உரையை ஊற்றி வைப்பர். விடியற்காலையில் தயிரை கடைந்து மோராக்கி விற்கச் செல்வர்.(பெரும். 228 – 229) மோர் விற்பதால் பெரும் செல்வத்தைக் கொண்டு பசும்பொன் வாங்காது எருமையும் கன்றையும் வாங்கித் தம் தொழிலை வளப்படுத்துவர்.(பெரும். 164 – 165) என்ற பாடலடிகள் மூலம் சங்க கால மக்களின் பொருளாதாரச் சிந்தனை குறித்து அறிந்து கொள்ள முடிகிறது.

**மருத நிலம்- வேளாண்மை** :

வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலம். நீர்வளம் நிறைந்த மருத நிலப்பகுதிகள் கழனி, பழனம், வயல்,செறு என்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் கழனி என்பது சேற்று வயலையும், பழனம் என்பது நெல் வயலையும் குறிக்கின்றது. மருத நில விளை நிலங்களை ''வயல்'' என்ற சொல்லால் குறித்தனர். சங்க இலக்கியங்களில் ''வேளாண்'' என்ற

சொல் இரண்டு இடங்களிலும் “வேளாண்மை“ என்ற சொல் ஒரிடத்தும் இடம்பெற்றுள்ளன.பயிர்த் தொழிலுக்கு ஏற்ற நிலப்பகுதிகள் நீங்க, விளைவின்றி விடப்பட்ட நிலப்பகுதியைக் கால்நடைகளின் மேய்ச்சலுக்கு என விடுவர். இவ்வாறு விடுபட்ட நிலம் “விடு நிலம்“ எனப்பட்டது. வேளாண்மைக்குப் பயன்பட்ட இடங்களுக்கு ஏற்றவாறு பெயரிட்டழைத்தது போலவே பயன்படாத நிலத்தையும் பிரித்தறிந்து பெயரிட்டிருந்ததை சங்கப் பாக்கள் தெளிவுறுத்துகின்றன.

உழவுத் தொழில் நீர் நிறைந்த பகுதிகளில் பெரும்பான்மையாக நடைபெற்றது. உழவுத் தொழில் செய்வோரை உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் என்று அழைக்கும் மரபு சங்க காலத்தில் இருந்து இன்று வரையில் வழக்கில் உள்ளது. தன் நிலத்தில் தானே உழுது பயிர் செய்பவர் “களமராவர்“(புறம்.212:2) என்றும் , உழுவித்துண்பவர் வீட்டிலிருந்து உணவும், உடையும் பெற்று உழவுத்தொழில் செய்து வந்தவர்கள் “மனைக்களமர்“(புற.387,251) எனவும் அழைக்கப்பட்டனர் .

வேளாண்மைத் தொழிலின் இன்றியமையாமையையும், தொழில்நுட்பங்களையும் தமிழர்கள் நன்கு ஆழமாகத் தெரிந்திருந்தனர். ஒரு நாட்டின் வாழ்விற்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படையானது உழவுத் தொழில் ஆகும். மனித வாழ்வின் அடிப்படைப் பொருள்களுள் உணவு என்பது முதன்மையானது முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். ஆதலால் தான் ”உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்கின்றனர் சங்கச் சான்றோர். ” சங்க காலம் உணவு தேடும் வாழ்க்கை முறைகள் மாறி உணவு உற்பத்தி முறைகளில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்ட காலம்”**4**என்பர் பெ.மாதையன் . உலகத்து எல்லாத் தேசங்களிலும் மக்கள் நாகரிகம் பெற்ற இடம் ஆற்றங்கரைகளிலும் ஏரிகளிலும் தான் என்று வரலாறு கூறுகிறது. தமிழ்நாட்டிலும் மக்கள் நாகரிகம் பெற்று வந்த இடம் ஆற்றங்கரைகளிலும், ஏரிக்கரைகளுமே ஆகும். ஆகவே, மருத நிலத்தில் தான் தமிழருடைய நாகரிகமும் பண்பாடும் வளம் பெற்று வளர்ந்தன”**5** என்கிறார். மயிலை சீனி வேங்கடசாமி.

**”மருத நிலம் நாகரிகத்தின் வளர்ப்பு பண்ணை”6** என்று மருத நிலத்தின் பெருமையைக் குறிப்பர். ஒருவர் மனிதப் பண்பினைப் பெற அடிப்படையாய் இருக்க வேண்டியது வளமை. உணவு இன்றேல் பண்பாடும் இல்லை; பழம் பெருமையும் இல்லை. ஆதலால் உணவுப் பொருளின் இன்றியமையாமையை உணர்ந்து வேளாண்மையைப் பெருக்கினர். தொடக்கக் காலந்தொட்டே தமிழர்களின் தொழில் மரபில் உழவுத் தொழில் தலைமைத் தொழிலாக, உயிர்த்தொழிலாக போற்றப்பட்டது. இதற்கான சான்றினைத் தொல்காப்பியர்,

“வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது

இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி“ (தொல் .பொருள். மரபு.81)

என்று குறிப்பிடுகிறார்.

**நெய்தல் நிலம் – வணிகம், உப்பு**:

நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த இடமும் ஆகும். நெய்தல் நிலத்து மக்கள் “பரதவர்“ என்றும் “பட்டினவர்“ என்றும் அழைக்கப்பட்டனர். நெய்தல் நில மக்கள் கடலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்தனர். கடலுக்குள் சென்று மீன் பிடிக்கக் கற்றுக் கொண்டனர். கடல் வாழ் உயிரினங்களே அவர்களது முதன்மை உணவுப் பொருளாகவும்,

பொருளாதாரமாகவும் அமைந்துள்ளது. மீன்களைப் பிடித்து அயல் ஊர்களில் விற்றும் உபரி மீன்களை உப்பிட்டு உலர்த்தி கருவாடாக்கியும் விற்றனர். கடல் நீரை பாத்திகளாகக் கட்டி உப்பளங்கள் அமைத்து உப்பு விளைவித்துள்ளனர். கடற்கரை ஓரங்களில் சில இடங்களிலே துறைமுகங்கள் இருந்தன. அத்துறைமுகங்களிலே வாணிகக் கப்பல்கள் வந்து இறக்குமதி ஏற்றுமதி செய்தபடியால் துறைமுகப் பட்டினங்களில் வணிகமும் செல்வமும் பெருகின. துறைமுகங்களில் பெரிய கப்பல்களின் கூம்புகளில் கட்டி இருக்கும் பாய்களை அவிழ்க்காது ஆற்றுமுகத்தில் உள்ள துறைமுகத்துக்குள் புகுந்து மலை போல் குவித்து வைத்திருந்த பண்டங்கள் கரையில் எளிதாக இறங்கின என்பதனை,

"மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது

புகா அர்ப் புகுந்த பெருங்கலத் தகாஅர்

இடைப்புலப் பெருவழிச் சொரியும்" (புறம்.30 :11 -13)

என்ற பாடல் வழி அறியலாம். கடல் ஓரங்களில் துறைமுகங்களை அமைத்ததன் மூலம் வாணிபத்தை ஏற்படுத்தினர். உள்நாட்டுப் பொருளாதாரத்தை வணிகமே உயர்த்தியது. வெளிநாடுகளோடு வணிகம் செய்யத் தொடங்கினர். தமிழரின் கடல் பயணம் பற்றி தொல்காப்பியமும் சுட்டுகிறது(தொல்.பொருள்.34). தரை வணிகத்தோடு தமிழர்கள் கடல் வழி வணிகத்தையும் மேற்கொண்டனர். சங்க காலத் தமிழர்கள் கடல் கடந்த நாடுகள் பலவற்றோடும் வணிகப் பண்பாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். தமிழர் வணிகம் குறித்து கு.வெ. பாலசுப்பிரமணியனும்,

**" இந்தியாவின் மேலைக் கடற்கரையிலிருந்து எகிப்து நாட்டிற்குத் தந்தத்தா லான பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. தங்கம், வெள்ளி, மஸ்லின் துணிகள், விலை மிக்க ரத்தினங்கள், செம்பு, இலவங்கம், கருங்காலிக் கட்டை ஆகியன வணிகப் பொருள்களாக இருந்தன"6** என்கிறார்

ஏற்றுமதி இறக்குமதியில் துறைமுகங்கள் எப்பொழுதும் ஆரவாரம் மிகுந்து இருந்தன. காவிரிப்பூம்பட்டினம்(புறம்.30: 1014), பட்டினப்பாலை(129-136), முசிறி (புறம்.343:1-8), கொற்கை(மதுரை:135-138) ஆகிய துறைமுகங்கள் சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கின.

கடல் வாணிகம் செய்தவரை "நாவிகர்" என்று அழைத்தனர். பெரிய நாவிகரை "மாநாவிகர்" என்றனர். இப்பெயர் மருவி "மாநாய்கர்" என்றானது. கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கு "எட்டி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. கிரேக்கரோடு கொண்ட வாணிபத் தொடர்பு பற்றிய முக்கிய குறிப்புகள் பலவற்றையும் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இந்த அடிப்படையில்,

" தமிழகக் கடற்கரையிலிருந்து மெல்லிய பட்டுத்துணிகள் பாரசீக வளைகுடாவிற்கும் பாபிலோனியாவிற்கும் சென்றன"7 என்று கு.வெ. பாலசுப்பிரமணியம் குறிப்பிடுவர்.

பழந்தமிழர் பண்டமாற்று முறையிலும், கடல் வழி வாணிகத்திலும் சிறப்புற்று விளங்கியதை,

"மீனொடு நெற்குவைஇ

மிசையம்பியின் மனைமறுக்குந்து

…………….

*கழித்தோணியாற் கரைசேர்க்குந்து" ( புறம்.343: 1-6)*

*என்ற பாடல் அடிகள் காட்டுகின்றன. பண்டமாற்று முறையில் மீனுக்குப் பதில் நெல்லை அளித்துள்ளதும், ஏற்றுமதிக்காக மிளகு மூட்டைகள் கரையோரம் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததும், இறக்குமதிப் பொருள்களாகிய பொறப்பரிசங்கள் கலங்களில் இருந்து தோணிகளில் கரைசேர்க்கப்பட்டதும் , மலையில் விளைந்த பொருள்களும் கடலில் விளைந்த பொருட்களும் நிறைந்திருந்ததாகவுமான முசிறி மாநகரை பரணர் காட்டுகிறார். பிறநாடுகளில் இருந்து பொருட்களை ஏற்றி வந்த கலன் கரை ஒதுங்க அதிலிருந்த பொருட்களை மீனவர்களும் உப்பு விளைவிப்போரும் எடுத்துச் செல்வதால் பொருட்கள் வழியெங்கும் சிதறிக் கிடந்ததையும் (புறம்.30:11-15), யவனநாட்டிலிருந்து மது இறக்குமதி செய்யப்பட்டதையும்(புறம்.58:18) அறிய முடிகின்றது.*

**முடிவுரை**

*தொகுப்பாக, தமிழர்களின் நிலப் பாகுபாடு வழியாக அவர்களின் பொருளாதாரச் சிந்தனைகளை அறியமுடிகிறது. உணவுத் தேவையை பூர்த்தி செய்யத் தொடங்கப்பட்ட தொழில்கள் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தினர். உணவு உற்பத்தி திறன் பொருளாதார உற்பத்தி நிலையாக உயர்ந்தது. பண்டமாற்றிலும், கடல் வணிகத்திலும் சங்க கால மக்கள் உயர்ந்திருந்த நிலையை அறியமுடிகின்றது. வணிகத்தில் சிறந்து விளங்கினாலும் பொருளின் நிலையாமைத் தன்மையை நன்கு உணர்ந்திருந்தனர். பொருளாதாரத்தால் வாழ்வியல் நிலை உயர்ந்தாலும் அறவழியில் பொருள் ஈட்டுதலை வாழ்வியல் அறமாக மேற்கொண்டுள்ளனர் என்ற பல பொருளியல் சார்ந்த செய்திகளை புறநானூற்றின் வழி அறியமுடிகிறது.*

**மேற்கோள்கள்**

1. *ப.முருகன், திருவள்ளுவரின் பொருளியல் சிந்தனைகள்>ப.10*
2. *ம.ப.குருசாமி>பொருளாதாரச் சிந்தனை வரலாறு>ப.1*
3. *மேலது>ப. 1*
4. *பெ.மாதையன்>சங்ககாலஇனக்குழுச்சமுதாயமும்அரசு உருவாக்கமும்>ப.11*
5. *மயிலை சீனி . வேங்கடசாமி>பழந்தமிழர் வணிகம்>ப.28*
6. *நமசிவாயம், தமிழர் உணவு, ப.14*
7. *கு.வெ.பால சுப்ரமணியன்>சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் >ப.287*
8. *மேலது>ப. 286*

**துணைநூற்பட்டியல்**

*துரைசாமிப்பிள்ளை, ஔவை (உ.ஆ) – புறநானூறு>*
*பூம்புகார் பதிப்பகம்>*
*சென்னை – 108*
*(மு. பதிப்பு டிசம்பர் 2012*

*சுப்ரமணியன் , ச.வே (உரை) - தொல்காப்பியம் பொருளதிகாரம்*

nka;ag;gd; gjpg;gfk;>
nrd;id

மீனவன் நா. முருகசாமி தெ (உரை) - அகநானூறு
(முல்லை பதிப்பகம்
சென்னை – 40

குருசாமி>ம.ப. > - பொருளாதாரச் சிந்தனை வரலாறு>
தாயன்பகம்>
திண்டுக்கல் - 624001

பாலசுப்ரமணியன்,கு.வெ. - சங்க இலக்கிய சமூக ஆய்வுகள்
தமிழ்ப் பல்கலைக்கழகம்>
தஞ்சாவூர்

மாதையன்>பெ.>- சங்ககால இனக்குழூச் சமுதாய அரசு உருவாக்கமும்>
பாவை பப்ளி கேஷன்ஸ்
சென்னை – 14

முருகன் .ப.> - திருவள்ளுவரின் பொருளியல் சிந்தனைகள்>
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்>
சென்னை -98

வேங்கடசாமி>மயிலைசீனி. - பழங்காலத் தமிழர் வணிகம்
நாம் தமிழர் பதிப்பகம்>
சென்னை - 5

நமசிவாயம். கே., - தமிழர் உணவு
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை